Subscription Rs 1 50
Postage to Ceylon & India 50
do Straits 75

Advertising charges per line 30
do per half col Rs 3 00
do per Column 5 00

# THE Hindu Organ

VOL X. ௧௦-ம் புத்தகம் | JAFFNA, WEDNESDAY APRIL 26, 1899 | இந்துசாதனம். | கலியுகஸு ௫௦௦௧. ௩ அகை எப்பிறில்௴ ௨௬௨ | NO. 18 இல ௧௮

PUBLISHED EVERY OTHER WEDNESDAY. பக்ஷத்துக்கொருமுறை புதன்கிழமைகளிற் பிரசுரிக்கப்படும்.

## NOTICE.

### CEYLON TECHNICAL COLLEGE.

DEPARTMENT OF CIVIL AND MECHANICAL ENGINEERING

*Entrance Examination, May,* 1899

The Entrance Examination for the next Courses in the two Departments of Civil Engineering and Mechanical Engineering will be held at the College in Colombo on May 22 and following days at 10 30 A M

Forms of application and full particulars can be obtained from the Superintendent

Successful students in these two departments of the College become eligible for appointments in the Public Works the Surveyor-General's, and the Railway Departments of Government service

E. HUMAN,
Colombo, March 30, 1899 Superintendent.

STANTON AND CO: VEPERY, MADRAS.

European and *Native* jewellery manufacturers, Diamond and ruby merchants, Designs and estimates on application Dont waste time to write or cable us "can you do this or that" we can do anything that comes within reason and depends upon brains and money and close application to business

SATISFACTION GUARANTEED

ORDER NISI

### IN THE DISTRICT COURT OF MULLATIVU.

Testamentary Juridiction } No. 13

In the Matter of the goods and chattels, Estate and property of Nagapper Arumugam of Point Pedro, late of Mullativu. deceased.

This matter coming on for disposal before C. S. Vaughan Esquire, District Judge of Mullativu on the 30th day of March 1899 in the presence of Mr, S. Senathirajer Proctor, on the part of the Petitioner Teyver Nagalingam, and the affidavit of Kathirgamer Naganather of Point Pedro dated the 17th day of March 1899 having been read, It is ordered that the said Teyver Nagalingam be, and is hereby declared entitled to have Letters of Administration to the Estate of Nagapper Arumugam of Point Pedro, late of Mullativn deceased, unless any person shall on or before the 31st day of May 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

The 30th day of March 1899

C. S. VAUGHAN
District Judge.

### IN THE DISTRICT COURT OF JAFFNA.

ORDER NISI.

Testamentary Juridiction } No. 976

In the Matter of the Estate of the late Parupathippillai wife of Ampalavanar of Karadive West
Deceased.

Arumukam Ampalavanar of Karadivu West
Petitioner.

Vs

1. Kanther Ampalam and
2. Kanthar Murukar both of Karadivu East
Respondents.

This matter of the Petition of Arumukam Ampalavanar, the abovenamed Petitioner, praying for Letters of Administration to the Estate of the abovenamed deceased Parupathippillai wife of Ampalavanar of Karadive West coming on for disposal before C. Eardley Wilmot Esquire, District Judge. on the 6th day of Aprit 1899 in the presence of Mr. S. Kandayah Proctor on the part of the Petitioner and the affidavit of the Petitioner dated the 5th day of April 1899 having been read it is declared that the Petitioner is the husband of the said Intestate and is entitled to have Letters of Administration to the Estate of the said Intestate issued to him unless the Respondents or any other person shall on or before the 30th day of May 1899 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 6th day of April 1899

Sd./ C. E. WILMOT
District Judge.

### HINDU COLLEGE, JAFFÑA.

The College will re-open after the Tamil New Year Holidays on the 12th of May 1899.

A commodious Boarding establishment, within 5 minutes walk from the College, with splendid arrangements, has been in existence for the last 3 months It is under the supervision of the Principal and in immediate charge of Mr. N. Ponniah, Boarding Master. Arrangements will be made when the College reopens to give private instruction to Boarders, with a view to enable them to appear for the Cambridge Local Examinations.

For further particulars apply to the Principal or to Mr. N Ponniah, Boarding Master. Students joining the College Department will receive every assistance to prepare for the Cambridge Senior Local Examination, along with their studies for the First-in-arts examination of the Calcutta University The Junior F A class will be formed on the 15th of May 1899

Hindu College Jaffna } N SELVADURAI
April 10th 1899 } Principal.

## TO OUR SUBSCRIBERS.

It is with the greatest reluctance we have to complain about the remissness of many of our subscribers in not sending their arrears due to our paper,though they were constantly reminded of it in these columns and a special circular sent to them If our subscribers wish that our papers should be thoroughly up to date in every respect they should not grudge to pay their dues promptly and strengthen our hands to effect the necessary improvements in the paper. Our thanks are due to those of our subscribrs who have responded to our circular and paid up their arrears.

*The Manager*

## THE HINDU ORGAN.

JAFFNA, WEDNESDAY, APRIL 26, 1899

### *CEYLON IN THE IMPERIAL PARLIAMENT.*

It will be seen from the report of proceedings in the House of Commons published elsewhere that Ceylon affairs have been prominently brought to the notice of the Imperial Parliament by more than one member, in connection with the Waste Lands Ordinance. Lord Stanley of Alderly also called the attention of the House of Lords to what be describ-ed as the inefficient action of the Magistrates and Police in Ceylon in the cases of the deaths of Mr. Tewson and Mr. Talwatte, the oppression and extortion taking place in Ceylon under the Waste Lands Ordinance, and to the prosecution of Mr. Le Mesurier. We are sorry that we cannot for want of space publish in our columns the interesting proceedings in the upper House.

It is not often that the affairs of a British Colony or Dependency are discussed in Parliament. We feel sure that those of Ceylon have never in recent times received the attention which some Members of Parliament and the whole English press seem now to bestow on them. This cannot fail to be productive of salutary results in the administration of this Colony, independent of any considerations as to the justice or validity of the cause these Members of Parliament have espoused. We do not intend any reflection on the high sense of duty that has always inspired every action of His Excellency Sir J. West Ridgeway in his administration of Ceylon when we say that the mere fact of Ceylon affairs coming under the scrutiny of the Imperial Parliament would be sufficient check on the Governors of the Colony and the Secretaries of State, who are sometimes tempted, with the best of intentions, to encroach on the rights and liberties of Her Majesty's subjects.

There cannot be two opinions as to the present Governor's great abilities as an administrator and his sincere wish to promote the material, moral and political interests of the people committed to his charge. The people of the North are under special debt of gratitude to him for his able and earnest advocacy of the cause of railway extension to Jaffna which he will carry out in spite of powerful opposition in interested quarters. But the fact remains that the Waste Lands Ordinance, which has been characterised by the Supreme Court of the Island as an extraordinary measure and which even Mr. Chamberlain was forced to admit to be "perhaps a too arbitary" piece of legislation, is a serious invasion on the rights of the subjects, even if it be true that Mr. Le Mesurier's proceedings necessitated its passing into law. It is again a well-known fact that during Sir J. West Ridgeway's administration, the judiciary of the Colony has been reduced to a subordinate position by the too frequent interference of the executive; just as the local Legislature has been reduced to a greater sham than it ever was, by the elimination from the native unofficial side of the Council of all independence and abilities We are, therefore, glad that Mr. Schwann has called the attention of Parliament to the evils resulting from the executive interference with the judicial establishment of the Colony, and that Mr. Chamberlain has promised to make inquiry from the Governor on the subject.

Mr Chamberlain's defence of the Waste Lands Ordinance seems to us to be plausible and based on incorrect information. His assumption that the un-official Members of the Council did not object to the measure and that it has given satisfaction to the vast majority of the native population of this Colony is not founded on fact. We have not the Hansard before us, but we perfectly remember that at the time the Ordinance was introduced it met with the most strenuous opposition from the unofficial members The then Tamil Member, Mr. Coomara Swamy, went the length of comparing the Government to a highway robber in this respect, which remark was resented by His Excellency the Governor who presided on the occasion. Rightly or wrongly—wrongly we believe—an impression has prevailed in the Colony, at least among the

(continued on the 4th page)

உ
கணபதிதுணை

வாழ்கவர்தணர்வானவரானினம்...... ...... ...
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக...........
ஆழ்கதீயதெல்லாமரனாமமே...... ...... ... ...
சூழ்கவையகமுந்துயர்தீர்கவே........ .........

# விளம்பரம்.

இவ்வியந்திரசாலையிலுள்ள சில புத்தகங்களின்விலை இப்பொழுது குறைக்கப்பட்டிருக்கின்றது. இனிமேல் இரண்டாம் பாலபாடம் ௧0 சதமாகவும் மூன்றும் பாலபாடம் ௨0 சதமாகவும் நிகண்டு ௧-வது முதல் ௧0 வது முடிய ௭௫ சதமாகவும், ௧௧ வது முதல் ௧௨ வது முடிய ௨௫ சதமாகவும் விற்கப்படும்.

இங்ஙனம்
இந்துசாதனமனேசர்.

## இவ்வியந்திரசாலையில் விலைப்படும புத்தகங்கள்.

| | | ரூ | சதம். |
|---|---|---|---|
| நமச்சிவாயமாலை... ... ... ... ... | ,, | - | ௩ |
| ஆத்திசூடி கொன்றைவேந்தன் உரை... | ,, | - | ௬ |
| முதலாம் பாலபாடம்... ... ... ... | ,, | - | ௬ |
| இரண்டாம் பாலபாடம்... ... ... ... | ,, | - | ௧0 |
| மூன்றும் பாலபாடம்... ... ... ... | ,, | - | ௨0 |
| நாலாம் பாலபாடம்... ... ... ... ... | ,, | - | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம்... ... ... ... | ,, | - | ௩௫ |
| சிவாலய தரிசனவிதி... ... ... ... | ,, | - | ௧௨ |
| தீர்த்தயாத்திரைவிளக்கம்... ... ... | ,, | - | ௧௫ |
| பூமிசாஸ்திரவிளக்கம் ௫-ம், ௬-ம், ௭-ம், ௮-ம், தரங்களுக்கு... ... ... | ,, | - | ௪௫ |
| மறைசையந்தாதியுரை... ... ... ... | ,, | - | ௨௫ |
| வைதிக சைவ சுத்தாத்துவித சைவ சித்தாந்தம்...... | ,, | - | ௨௫ |
| நிகண்டு முதலாவதுமுதல் ௧௨வது முடிய | | ௧ | - |
| நிகண்டு முதலாவதுமுதல் பத்தாவதுமுடிய | ,, | - | ௭௫ |
| நிகண்டு ௧௧-வது முதல் ௧௨-வது முடிய... | ,, | - | ௨௫ |

### விளம்பரம்.

௧௮௯௯ம் ஹூ சித்திரைமீ ௧௩ திகதி யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை குடி சினுசித்தம்பி வேலுப்பிள்ளையும் பெண் கண்ணுத்தைப்பிள்ளையுமாகிய நாங்கள் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கில் ஐயம்பெருமாள் சிவகாமியும் மறுபேரும் தோம்பு ஐயன்தறை பர. நில. இலா. 8 1/8 இரண்டுகட்டுக் கல்வீடும் இரண்டு கிணறுகளும் செய்பயிரும் எல்லைகிழக்கு விடத்தற்றீவுகற்பகப் பிள்ளையார் கோயிலாதனம் வடக்கு சின்னத்தம்பி வைத்தியலிங்கத்தினுடைய ஆதனம், மேற்கு வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரசுவாமிகோவில் ஆதனம் தெற்குரோட்டு இந்த எல்லைக்குட்பட்ட வீட்டையும் காணியையும் சோமவாரமடமாக நாங்கள் தருமசாதனம் பண்ணிப்போட்டோம். இதிலுள்ள அசைவற்ற அசைவுள்ள பொருள்களாவையும் அதற்குத் தருமசாதனம் பண்ணிப்போட்டோம்.

சி. வேலுப்பிள்ளை
X கண்ணுத்தைப்பிள்ளை (கீறு)

### இந்துசாதன கையொப்பவரவு.

| ஸ்ரீ | | ரூ சத |
|---|---|---|
| ராம. சு. இராமன்செட்டியார் | மதுரை | ௧-00 |
| செல்லையாகங்காணி | ரத்தினபுரி | ௨-00 |
| அழ. ா. இராமசாமிக்கணக்கப்பிள் | கொறாலி | ௭-00 |
| ம. சிதம்பரப்பிள்ளை | ரத்தினபுரி | ௨-௫0 |
| A. காசநாதர் | நுவரேலியா | ௯-00 |
| பா சண்முகக்குருக்கள் | வட்டு | ௧-௫0 |
| கதிர்காமர் சின்னத்தம்பி | மீசாலை | ௧-00 |
| க. செல்லையா | மட்டக்களப்பு | ௮-௫0 |
| R. கந்தையா | வதிலை | ௯-00 |
| K. கல்லசேகரம்பிள்ளை | பூவாசங்குளம் | ௨-00 |
| Patron | | |
| வே. மு. முத்துவேலுப்பிள்ளை | | ௧0-00 |

### இந்துகாலிஜ்க்காக தொந்தாரிசுமார் உபகரித்தபணம்.

| மாஸ்ரீ. | | ரூ. ச. |
|---|---|---|
| ,, | C. கதிரவேற்பிள்ளை | ௧௮-௯0 |
| ,, | C. வேலாயுதர் | ௭-௧0 |
| ,, | K. கதிர்காமத்தம்பி | ௨-௪௫ |
| ,, | K. தம்பாபிள்ளை | ௬-00 |
| ,, | M சுப்பிரமணியர் | ௯-00 |
| ,, | P. சிதம்பரப்பிள்ளை | ௯-00 |
| ,, | V. சின்னத்தம்பி | ௬-௨௫ |
| ,, | க செல்லப்பா | ௧-௫0 |
| ,, | இ. வயித்தியநாதர் | ௨-௯0 |
| ,, | ச. பொன்னுத்துரை | ௧-௮0 |
| ,, | K. சபாபதி | ௧-00 |

யாழ்ப்பாணத்திலேயுள்ள ஏனைய தொந்தாரிசுமாரும் இவ்வுத்தமோத்தம புண்ணியத்துக்கு, மேலைய தொந்தாரிசுமாரைப்போல உறுதிக்கோர் விகிதம்வைத்துச் சேர்த்துக்கொடுப்பார்களெனக் காத்திருக்கிறோம்,

(இ. சா, ப.)

# இந்துசாதனம்.

## துறவு.

இக்காலத்திலே, முத்திவழிதேடிப் பத்திவழிநிற்போர் பலர், புறத்தாசாரங்களாலும், பொய்வேடக் கர்மாதிகளாலும் தாம் மேனிலைக்கெய்திவிடலாமென மயங்கியுழலுவாராயினர். இவர்களகத்தே வீணான விளக்கமொன்றுண்டு. அஃதாவது:- உடம்புகலிய வருந்துதல், வண்வகைகளைக் கிரமப்படுத்துதல், பூசை செப தபாதிகள்செய்தல், சாஸ்திரங்களைப் பொருளறியாது கற்று, பனத்தை நிரப்புதல், ஆகிய இக்கிரியைகள்மாத்திரம் ஒருவனை ஞானதசைக்கண்ணே சேர்த்துவிடுமென எண்ணுகின்றனர். இவர்களுடைய சிஷியத்தை உள்ளபடியெடுத்து நோக்குங்கால், இவரெல்லாம் உலக ஆசையென்னும் முதலைவாய்ப்பட்டு இருந்தவிடம போனவிடமறியாது தடுமாறியலைதப்படும் போலியாசாரிகளாயிருக்கின்றனர். "லலிதவிஸ்தாரம" என்னுந் தத்துவசாஸ்திரத்திலே இப்போலியாசாரக்காரரைப்பற்றிப் பின்வருமாறு கூறப்பட்டிருக்கின்றது.

"சிலர் ஆற்றிலே மூழ்கினமாத்திரத்தில் அகத்தழுக்கு நீங்கிவிடுமென்பர். மற்சமாமிசம் புசியாமைமாத்திரமே முத்தி சித்திக்கத் தக்க ஏதுவென எண்ணி அவைகளைப்புசியாதொழிவார் சிலர். புலையும் பூண்டையும் சருகையும் கிழங்கையுந்தினறு விடுபெற முயலுவார் சிலர். கோசலகோமயமருந்திப் பிறவிமயல்தீர்க்க எத்தனிப்பார் சிலர். மடிகாலிட்டு முழந்தாட்களைசேர்த்து மௌனசாதனஞ்செய்து, தம்மை ஞானசுதந்தரரென் றெண்ணுவார் சிலர். நாலாறுநாளுக்கொருபோதுண்ணலால் மறுமையின்பம் சாதனமாமென எண்ணியவ்வாறுசெய்வார் சிலர். நிர்வாணமாய்த்திரிவார் சிலர். அநேக வஸ்திராபரணிகளாய்த்திரிவார் சிலர். தாடியும சடையும் மரவுரியுடையும் கொள்வார் சிலா. இவ்வண்ணம் செய்வாரெல்லாம் இனிப் பிறவாவாழ்வெய்துவோம் யாமென எண்ணிக்கொள்ளுதல்மாத்திரமன்றித் தம்மைவிடப் பெரியோரும் பரிசுத்தருமில்லையெனவும் நடிப்பர். இன்னுஞ் சிலர் பஞ்சாக்கினிமத்தியிலே ஒற்றைக்காலில் நின்றுகொண்டிருப்பதால் தபம் முற்றியதெனக் கருதி மோசம்போவார். மேற்கூறிய போந்தவர் யாவரும் சன்மார்க்கமென்றெண்ணித் துன்மார்க்கம் செல்வாரேயாம்." நருமதையாற்றங்கரையிலே ஐம்பத்தேழுவருடங்களாக அதயோகமெனற்பாலதாகிய ஓர்யோகத்தைச் செய்துகொண்டிருந்த யோகியொருவர், அந்நியதேசத்துத் தத்துவஞானியொருவரை, மனமடக்கும்வகை யாதென வினவினராம். ஐம்பத்தேழுவருடம் யோகசாதனஞ்செய்தஇச்சீமானுடையநிலைஇவ்வாறாயின் பூக்கையேந்தி மாய்மாலப்பூசைசெய்யும் பூசகர்நிலை எவ்வாறோமோ. 'யான்' 'எனது' என்னும் அகப்பற்றுப புறப்பற்றுக்களை வேரறக்களைந்தாலேயன்றி மலநீக்கம் சித்தியாதென்பதை யுணரார் இருந்தென்! இறந்தென்!

மனம்வாக்குக்காயமென்னும் திரிகரணங்களில் ஏதொன்றினும் மன்னுயிர்க்கிதஞ்செய்யாதவனே தவசிரேஷ்டனன்றி விரதாதிகளால் காயத்தைவருத்தி மெலிந்தவன் தபத்தோனாகான். சுற்றத்தவரிடத்தே அன்பில்லான் சரீரசுத்தியுடையானாயினும்பாவச்செயலினின்றும் நீங்கினானல்லன். லௌகிகசுகானுபவங்களினின்றும் விலகியிருத்தல்மாத்திரமே துறவன்று. என்றைக்கும் மனச்சுத்தமுடையோனும, சற்குணங்களே தனக்கணிகலனுயுடையோனும், கனவிலும் சிவகாருண்ணியப் பயிற்சியுடையோனுமே, முனிவனுவன். இல்லாச்சிரமத்தைப் பொருந்தியிருப்பவனேயாயினும் இவனே உள்ளத்துறவுடையோன்.

எத்தவத்தைச்செய்தாலும்எதவத்தைப்பட்டாலும்
முத்தர்மனமிருக்கும்மோனத்தே—நித்தம்
காதிவிளையாடியிருகைவீசிவந்தாலும்
தாதிமனம்நீர்க்குடத்தேதான்.

செப தப விரதாதிகளால் பயனில்லையென்பது நமது கருத்தன்று. ஆயின் உள்ளன்பிலாதுசெய்யும் கிரியானுஷ்டானங்களால் யாதும் பிரயோசனமில்லையென்பதைமாத்திரமேநாமிங்குசொல்லவந்தேம். கண்ணப்பநாயனாரவர்கள் மாமிசத்தையேநிவேதித்துப்பூசித்தும் உள்ளன்போடு அங்ஙனஞ் செய்தமையாலன்றோ நற்கதியடைந்தார். "படிப்பது திருவாசகம் இடிப்பது சிவன் கோயில்" என்னும் வாக்கியத்திற்கிலக்காய்ச் சிவவேடங்களைத் தரித்துக்கொண்டு பல பாதகங்களையும் புரியவராயுள்ள வேஷதாரிகளையே நாம் மேலேகண்டித்தேமென்க.

## சமாசாரம்

காலநிலை—வருஷஆரம்பத்தோடு மழையுமாரம்பித்து மாரிகாலத்திற்போலபெய்து இப்பொழுது வெளித்திருக்கின்றது. இவ்வித அகாலமழை முன்னொருபோதும் பெய்திருக்கவில்லை. தென்றற்காற்றும்முமுரமாய்வீசினும் புளுக்கமதிகமாயிருக்கின்றது.

உத்தியோகநியமனம்—சங்கரோடை ஸ்ரீ வேலுப்பிள்ளைமுதலியார் முத்துவேற்பிள்ளையவர்கள் வவுனியா வடபகுதிக்கு டிஸ்திறிக் முதலியாராக நியமனம் பெற்றிருக்கின்றனர்.

மரணம்—சென்னையிற் பிரபல புரோக்கராகவிருந்து காலஞ்சென்றுபோன ஸ்ரீ சரவணமுத்துப்பிள்ளையவர்களின் சகோதரனும் அப. ஸ்ரீ. கனகசபையவர்களின் மாதுலருமாகிய பன்னாலை ஸ்ரீ. கனகசபையவர்கள் சென்றமீ ௨௮௨ தேகவியோகமாகிவிட்டனர். இவர் நெடுங்காலமாகக் காலி சென்னை முதலியவிடங்களிலிருந்து பெரும் வியாபாரம்நடாத்திப் பின்னர் இங்குவந்து தமதுசுற்றமித்திரர்மத்தியில் வசித்திருந்தவர். எங்குஞ் செல்லக்கூடிய முகவசீகரமும் சிவபக்தி விசுவாசமுமுடையவர். இவரையிழந்து துன்புறும் இவரது மருகர் அப். ஸ்ரீ. கனகசபையவர்களோடு மற்றுமுள்ள சுற்றமித்திரரோடும் நாமுமனுதாபப்படுகின்றேம்.

பெண்பறிபோன வழக்கு:—மெஸ். கலிஸ்தவர்களின் மகன் அழகம்மாவைக் கவர்ந்துசென்ற குற்றச்சாட்டின்பேரிற் சுப்பிறீங்கோட்டில் விளக்கப்பட்டு விடுதலைபெற்ற மெஸ். இராசையா மீது, கள்ளச்சத்தியம் பண்ணினரென்னுங் குற்றச்சாட்டின்பேரில் அற்றோணிஜெனறலவர்களாற் கொணடுவரப்பட்ட வழக்குச் சுப்பிறீங்கோட்டிற்குப் பாரப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வழக்கு மட்டக்களப்பில் விளங்கப்படுமெனக் கேள்வி,

டக்தர் செல்லையாபோல்—யாழ்ப்பாணம் ஆபத்துக்குதவிவைத்தியசாலை டக்தர் உவில்லியம்போலவர்களின் புத்திரன் டக்தர் செல்லையாபோலவர்கள் கொழும்பில் டக்தர் அசரப்பா அவர்களின் புத்திரியைவிவாகஞ்செய்து பாரிசமேதராய் லேடிகோடன் மார்க்கமாக சென்ற ௨0ல இங்குவந்தனர். இவர்காங்கேயன் துறையிலிறங்கி மௌவாதுநியங்களோடு வீடுசென்றபோது வழியிற் சிலர் இவரை எதிர்கொண்டு உபசாரணையுஞ்செய்தனர்

வவுனியாவுக்கோர் கிராமநீதிபதி—மட்டக்களப்புக்கச்சேரி சு-ம் கிளார்க் ஸ்ரீ.செல்லையா அவர்கள் வவுனியாபகுதிக்கு கிராமநீதிபதியாக நியமனம்பெற்றிருக்கின்றனர். ஸ்ரீ செல்லையா அவர்கள் முல்லைத்தீவுக் கச்சேரியில் சிரேஷ்டலிகிதராயிருந்து காலஞ்சென்று போன ஸ்ரீ. கணபதிப்பிள்ளையவர்களின் புத்திரன். கல்வியறிவும், யோக்கியதையும், நற்குடிப்பிறப்புமுடைய இவர்க்கு இவ்வுத்தியோகம்தகுமென்பது நாம சொல்லவேண்டியதில்லை.

குதிரைவளர்த்தல்—நெடுந்தீவில் இப்பொழுது ஏறக்குறைய அறுபது பெண்குதிரைகளும் ஒரு அரேபியன் ஆண்குதிரையும நிற்கின்றன. இக்குதிரைகள் எல்லாம் இப்பொழுது குட்டிகள் ஈன்றிருக்கின்றன. இரணைதீவில் ௧௯ குட்டிக்குதிரைகள் நிற்கின்றன. இக்குதிரைகள் மற்றவருஷம விலைப்படக்கூடியனவாம். கொழும்பிலிருந்துவந்து இக்குதிரைகளை பார்வையிட்ட அரசாட்சி மாட்டுவைத்தியர் மெஸ். ஸ்ரேர்ஜெஸ் என்பவர் அவைகள்மிகவும் நல்லநிலையிலிருக்கின்றனவெனவும் முந்திய குதிரைகளிலும் இவைகள் அதிக உயரமும் நற்குறிகளுமுடையனவெனவும் கூறியிருக்கின்றனர்.

ஓர்தோணி மோசம்போனது—அக்கியாப்பிலிருந்து இங்குள்ள ராம.மெ.சி.த.கடைக்கு நெல்லேற்றிக்கொண்டுவந்த தோணியொன்று முல்லைத்தீவுக்கரையில் மணலிற்பொறுத்து மோசமபோய்விட்டது. நெல்லில் ௫00 புசல்தவிர மற்றவையாவும் மோசம்போய்விட்டதாம். இத்தோணி ௧0000 ரூபாய்க்கு இன்சுயர்செய்யப் பட்டிருப்பதால் ( insured ) கடைக்காரருக்கு ௨000 ரூபா வரையிற்றான் நட்டமுண்டாம்.

மெஸ்றட்—எங்கள் பழைய ஏசன்றர் சேர் உவில்லியம் துவைன்மவர்கள் காலத்தில் இங்கு பொலிஸ் சுப்பெறின்றனுகவும் உதவிப் பிசுக்காலாகவுமிருந்த இவர் சென்ற ௨0ம் தேதி லேடிகோடன்கப்பல்மார்க்கமாக இங்குவந்து தமது கடமைகளைக் கைபேற்க மெஸ். திறங்கலவர்கள் தமது புதிய உத்தியோகஸ்தானமாகும் காலிக்குப்பயணமாயினர்.

தலைமைக்காரருக்குநன்கொடை—தங்கள்கிராமங்களில் தீச்செயல்களதிகரிக்காதபடி தடைசெய்து மிகவிழிப்புடனும சாவதானத்துடனும் தங்கள் கடமைகளைநடாத்திவந்த மேன்மாண தலைமைக்காரர் சிலருக்கு கொழும்பிலே சென்ற ௨௨ம் தேதி தேசாதிபதியவர்களாற்பட்டயங்களளிக்கப்பட்டன. மேன்மாகாணத்தில் ஏறக்குறைய அ௫0 தலைமைக்காரர் இருக்கின்றனர். இவர்களுட் சிலர்மாத்திரமே தெரிவுசெய்யப்பட்டுப்பரிசளளிக்கப்பெற்றனர். இப்பட்டயங்கள் ஏறக்குறைய ௫000 ரூபா பெறுமதியுள்ளனவாம். எம்மூர்த் தலைமைக்காரருக்கும் இவ்விதபட்டயங்கள் கொடுக்கப்படுமோ தெரியாது.

தந்தையைக்கொல்லஎத்தனித்த மைந்தன்—ஓர்சேட்டுச் சிங்களத்தட்டான் தனது தந்தைக்கு விரோதமாகக் கொழும்பு தெக்குவேஸ்துக்கோட்டில் ஓர்வழக்குக் கொண்டுவந்தான். தனது தந்தை தனக்குரிய சில சாமான்களை அடாத்தாக மறித்துவைத்திருக்கிறானென்பதே இவனது முறைப்பாடு. விளக்கத்தில் தந்தையானவன் இவனைத்தனது மைந்தனல்லவென்று மறுத்துவிட்டபடியாலும், வேறுசாட்சிகளைக்கொண்டு எதிரியே தனதுதந்தையென்று அத்தாட்சிப்படுத்த இவனால்முடியாதபோனமையாலும் வழக்குத் தள்ளப்பட்டது. வழக்குத்தள்ளப்பட்டதைக்கண்டஎதிரி,சில சிநேகிதரோடுசெப்பிறீங்கோட்டுவீட்டிற்குச்சமீபமாய்நின்று

பேசிக்கொண்டிருந்த தனது தந்தையையனும் அவன் முதலில் ஓர்கத்தியாற் குத்தினன். பின்னருமிவன் அவனைக் குத்திவிடாது தடுக்கச்சென்ற வேறொருவனுக்கும் கழுத்திற் குத்திவிட்டான். இவ்வாறு பெருங் கலிபிலிநடந்தபோது போலீசர்சென்று இவனை அமர்த்திக்கொண்டனர். இக்கலிபிலியிலகப்பட்ட இவனது தந்தையின் மனைவிக்கும் ஓர் சிறுவயதுப் பையனுக்கும் காயமாம். இத்தருணத்தில் ஓர் கொலைவழக்கை விளங்கிக்கொண்டிருந்த சிரேஷ்ட நீதிபதியும் வழக்கைநிறுத்திக் கலகத்தின் காரணத்தை வினவியறிந்து ஆச்சரியப்பட்டனராம்.

ஸ்ரீ. ஆனந்தக்குமாரசுவாமி—எங்கள் தமிழ்ப்பிரதிநிதியாயிருந்து காலஞ்சென்றுபோன சேர் குமாரசுவாமியவர்களின் ஏகபேரன குமாரனாகிய இவரும் இவரது தாயாரும் கொழும்பிலுள்ள தங்கள் சுற்றமித்திரர் மத்தியில் சிறிதுகாலந்தங்கி இப்பொழுது சீமைநோக்கிப் பயணமாயினர். கண்டி, நுவரெலியா, காலி முதலியவிடங்களையும் சென்று தரிசித்தார்கள். ஸ்ரீ. ஆனந்தக்குமாரசுவாமியவர்கள் கல்விகற்று அரங்கேறியபின் ஒருபோது தமது ஜெனனதேசமாகும இலங்கையைநோக்கித் திரும்புவரோ தெரியவில்லை.

பீ. ஏ. பட்டம்—யாழ்ப்பாணத்து இஸ்லாமானவர்களுக்குள்ளே இதுவரையும் பீ. ஏ. பட்டம்பெற்றோர் யாருமில்லை. இப்பொழுது மெஸ். மு. அப்துல்காதறு என்பவர் சென்னைபட்டணம் போய்க் கற்று, இவ்வருடத்திலே பீ. ஏ. பட்டம் பெற்றார். இவர் ஒரு சற்குணனும் சன்மார்க்கனுமாயுள்ளவர் இவர் இப்பட்டம் பெற்றது, யாழ்ப்பாணத்து இஸ்லாமானவர்களுக்கு அளவற்ற மகிழ்ச்சியைக் கொடுக்குமென்பதிலையமின்று.

கடி.

சுட்டுக்கொன்றது—கொழும்பிலே பேனண்டோ என்னுமோர் சாய்ப்புக்காரன் ஆபீஸிலிருந்து வீட்டுக்கு ஓர் இழுவைவண்டியிற் சென்றபோது சென்கிபன்றியன் ரோட்டில் யாரோவொரு பாதகன் தலையில் முக்காடு இட்டுக்கொண்டு வண்டியைத் தடைசெய்து அவரிற் சுருவ அவர் கீழேயிறங்கினர். இறங்கவே இப்பாதகன் ஓர் கைத்துவக்கால் அவரது முதுகிலும் தலையிலும் சுட்டுவிட்டான், உடனே மெஸ். பேனண்டோ கீழேவிழுந்து பிரேதமானர். இக்குரூரச்செயலைச்செய்தவன் இன்னுமகப்படவில்லையாம். மெஸ். பேனண்டோ ஓர் விதவையை விவாகம் பண்ண வாக்களித்துப் பின்மறுத்து வேறு விவாகஞ்செய்துவிட்டதால் அவ்விதவைக்கு இவர்மேற் பெரும் மனக்குரோதமுண்டாயிருந்ததாம். இவ்விதவை மூலமாகவே இக்கொலை நடந்திருக்கவேண்டுமென எண்ணப்படுகின்றது.

மெஸ். லெமருசியர் வழக்கு—மெஸ்லெமருசியரவர்கள் அற்றேணிச்ஜெனறலை எதிரியாகக் கொண்டு இலங்கையரசாட்சியாருக்கு விரோதமாகக் கொண்டுவந்த வழக்கு கோட்டுச்செலவோடு தள்ளப்பட்டது.

ஆற்றிலமிழ்ந்திறத்தல்—சென்ற ௭ம் தேதி மினுகென்னியென்னும் ஓர் பறங்கிக்கன்னிகையும் அவளது ஆயாளும் அவளது சகோதரனும் வேறொருவனுமாகக் கூடிக்கொண்டு "பனுமடலவா" என்னுமாற்றில் நீராடச் சென்று ஆற்றங்கரையையடைந்தபோது கன்னிகையும் ஆயாளும் ஆற்றிலிறங்க மற்றவர்கள் வெளியில் நின்றார்கள். சிறிதுநேரத்திற் சடுதியாய் ஆறு பிரவாகமாகப் பெருகத்தொடங்கியதால் ஸ்நானஞ்செய்துகொண்டிருந்த கன்னிகையும் ஆயாளும் நீரிலகப்பட்டு அமிழ்ந்தி இறந்துவிட்டனர். கன்னிகையின் பிரேதம் ஒருமயிலதூரத்துக்கப்பாற் கண்டு எடுக்கப்பட்டதாம். ஆயாளின் பிரேதத்தைக் கண்டுகொள்ளவில்லையாம்.

## கடிதம்

### ஆன்மலக்ஷண ஆபாச நிராகரணம்.

சத்தியவேத பாதுகாவல பத்திராதிபர் "சைவசமய ஆன்மலக்ஷண ஆபாசம்" எனத் தலையில் எழுதிக்கொண்டு ஓர் வரம்பின்றி வாயில்வந்தன பேசி ஆன்மலட்சணமனைத்தும் தம்மதத்திலேயே பொருந்தியுளதென்றும், சைவசமயத்தில் அங்ஙனமின்றென்றும் மனம்போனவாறு எழுதித்தள்ளுகின்றார். ஆன்மலக்ஷணந் திறிஸ்துமதத்திலுளதாவென்பது ஐயத்திறுமையமாக, இவர் இறுமாப்போடு எம்மதத்திலேயே அஃதுளதென்று வரையத்தொடங்குவது அறிவுடையார்க்கு ஆச்சரியந்தராதொழியாது.

ஆன்மா "அநாதிநித்தியமாயுள்ள ஒருபொருள்" என்று சைவசமயங்கூறுதல் அடாதென்றும், 'ஆதிநித்திய' மென்னும் தங்கூற்றே அடுக்குமென்றும் சில போலிநியாயங் காட்டுகின்றார். இவர் அநாதி, ஆதி, நித்தியம் என்னுஞ் சொற்களின் பொருள்களையும், நித்தியவஸ்து, அநித்திய வஸ்துக்களின் இலக்கணங்களையும் அறிந்தாராயின் இங்ஙனம் பேசத்துணியமாட்டார். "தோன்றியவெல்லாம் அழிவெய்தும்" என்பது பதார்த்த சோதனையுடையார் அபிப்பிராயமாம் ஆதலால், எது ஆதியையுடையதோ அது அந்தமுடையதாகவேயிருக்கவேண்டும். கட படங்கள் ஆதியுடையன. அந்தமடைகின்றன. அதுபோல ஆன்மா ஆதியுடையதாயின் அந்தமுமுடையதாகவேயிருக்கவேண்டும். அந்தமிலதென்பதை இவரேயொத்துக்கொள்கின்றார். அந்தமிலதாகவே ஆதியிலதென்பதும் தானேபெறப்படுகின்றது அங்ஙனமாக ஆதியந்தமிலாத ஒருபொருளை "அநாதிநித்தியம்" என்னுது வேறென்னென்று சொல்லலாம்.

இனி "நித்தியம்" என்னுஞ்சொல் எப்பொழுதுமுள்ளது என்னும் பொருளைத்தரும். ஆன்மா நித்தியமான பொருளென்பது இவர்க்குமுடம்பாடாதலால், எப்பொழுதுமுள்ள பொருளென்பதையும் இவர் ஒத்துக்கொள்பவராகின்றார். எது எப்பொழுதுமுள்ளதோ அது அந்தத்தைமாத்திரமன்று ஆதியையும் இல்லதாம். இங்ஙனம் நித்தியமென்னுஞ்சொல்லே ஆதியந்தமில்லது என்னும் பொருளைத்தர இவர் அதனையோராது ஆன்மா நித்தியம் ஆனல் ஆதியுடையது என்று முன்பின் யோசனையின்றிக் கூறுதல் என்னையோ?

இனி "ஆதிநித்தியம்" என்பதில் ஆதியென்பது ஒரு காலத்துத் தோற்றியது என்றுபொருள்தர, நித்தியம் என்பது எப்பொழுதும் உள்ளது என்று பொருள்தந்து ஒன்றுக்கொன்று மறுதலைப் பொருளுடையவாயிருப்ப, இவர் அதனை நோக்காது 'ஆதிநித்தியம்' என இலக்கணமமைத்ததென்கொலோ? நித்தியமென்னுஞ்சொல் பின்னுண்மையைமாத்திரங் குறிக்குமாயின் ஒருவேளை இவர்கூறிய இலக்கணமமையலாம் என்றுமுண்மையைக் குறித்தலே அதன்பொருளாம்போது அவ்விலக்கணமெங்ஙனமமையும்? இதனால் இப்பத்திராதிபர் அச்சொற்களினர்த்தந் தெரியாமலெழுதிவிட்டாரென்று எண்ணுகின்றோம்.

சைவர்கள் அச்சொற்களினர்த்தமும் பதார்த்தவியல்புகளும் நன்குணர்ந்தவர்களாதலால், நித்தியமென்னும் இலக்கணமமைந்துள்ளவான்மா என்றுமுள்ளதே ஆதியாகிய ஒருகாலத்துற்பவமானதன்று என்று கூறுகின்றார்கள். அது ஆந்தையின் கண்ணுக்கு ஆதித்தப்பிரகாசம் இருளாய்த் தோற்றினாற்போல இவர்க்கு மாறுபாடாய்த் தோற்றினால் அதற்குச் சைவர்கள் என் செய்வார்கள்.

இனி ஆதியில்லாமை கடவுளோடொப்புமையாகின்றதேயெனின், அந்தமில்லாமை கடவுளோடொப்புமையாகவில்லையா? அந்தமின்மையாகிய ஒப்புமைமாத்திரம் வரலாம், ஆதியின்மையாகி ஒப்புமைமாத்திரம் வரலாகாதென்பது நியதமா? ஒப்புமைகுறுதல் குற்றமாயின் ஒருவகையாலும் ஒப்புமைவரலாகாது, அங்ஙனமின்றி ஒருவகையான் ஒப்புமையையொத்து மற்றொருவகையான் வரும்போது மாத்திரம் மறுத்தல் என்னநியாயங்கொண்டோ?

இன்னும் ஆன்மாவும் கடவுளும் சித்துப்பொருள்களென்று இவர் கூறுவதில் சித்துத்தன்மையாகிய சாதியொப்புமையுண்டாகவில்லையா? கடவுளும் சித்துப்பொருள் ஆன்மாவும் சித்துப்பொருள், கடவுளும் அழியாதவர் ஆன்மாவும் அழியாதது என்றும் அவ்வொப்புமைகளான்மாத்திரங் கடவுளுக்குக் குறைவுண்டாகாதா? அவர் இவைகளையெல்லாம் உய்த்துணராததென்?

இனி ஆன்மாக்கள் கடவுளால் உண்டாக்கப்படாது நித்தியமாய் இருத்தல் கடவுளுக்கு ஒரு பெருங்குறையென்கிறார். அங்ஙனமாயின் அவரால் அழிக்கப்படாது நித்தியமாயிருத்தலாகிய தன்மை ஆன்மாக்களுக்கு உளதாதல் அவர்க்குக்குறைவாகாதா? கடவுளால் ஆன்மாக்களை உண்டாக்கமுடியாதோ வென்பவர்கள் அவரால் ஆன்மாக்களை அழிக்கமுடியாதோவென்னும் வினாவுக்கு என்சொல்வார்கள்? முடியுமெனின் அவரால் இவ்வான்மாக்கள் அழிக்கப்படுமெனப்பட்டு அழியா நித்தியத்தன்மை ஆன்மாவின்கணுளதென்னும் இவர் வாய்மொழி பயனற்றதாய்விடும். ஆதலால், ஆக்கப்படாமையான்மாத்திரமன்று அழிக்கப்படாமையானும் கடவுளின் வன்மைக்குக் குறைவருமென்றுணர்ந்து முன்னர் அதற்குப்பரிகாரந் தேடியுய்யக்கடவர்.

இன்னும் ஒரு அரசன் தன் குடிசனங்களைப் புத்திரராகப்பெற்றிராமை அவனுக்குக்குறைவன்று. அவர்களுக்குத் தலைவனயிருந்து அவர்களைக் காத்துவருதலே அவன்யாவரிலும் மேன்மையுடைய ஒருபெருஞ் சத்திமான் என்பதையும் ஏனையோர் அன்னரல்லரென்பதையும் இனிது காட்டுகின்றது. அதுபோல ஆன்மாக்களெல்லாம் கடவுளால் உண்டாக்கப்படாமையால் அவர்க்கு ஒரு குறை நேரமாட்டாது. அவ்வான்மாக்களைத் தந்நிழடக்கி உலகிற் படைத்துக் காத்து அழித்து மறைத்து அருளுங் குணமகிமை அவர்பால் விளங்குதலே அவரது கடவுட்டன்மைக்குப் போதிய இலக்கணமாம். ஆதலால், இவர்கூறும் அக்குறையும் சைவர்களது கடவுளின்பாற் செல்லாதென்க. (வரும்)

S. T.

## அநுவாதம்.

### தெய்வ தரிசனம்.

"அச்சமாங்காரமகத்தடக்கினற்பின்னை
நிச்சயமாமீசனிலை."

பலவேறு வகைப்பட்ட வஸ்துக்களும், பலவேறு வகைப்பட்ட உயிர்களும் பொருந்திய இவ்வுலகத்திலே உயிர்கள் வஸ்துக்களைப் பொருந்தி அநுபவிக்கின்றனவென்பதும், அநுபவிக்கும் உயிரும் அநுபவிக்கப்படும் வஸ்துவும் தாமேபொருந்த ஆற்றல்பெறுது இவ்விரண்டுபொருள்களுக்குந்தலைவனகிய ஈசுரனாலேகூட்டப்படும் என்பதும் தத்துவ ஆராய்ச்சியிற் றலைநின்ற பெரியோர் நன்கு காட்டிய விஷயங்களாம். ஆகவே அறிவு விளக்கம் பெறும் இவ்வுயிர்கட்குத் தமக்கு அவ்விளக்கத்தை யுபகரிக்கும் பரம்பொருளைக் கண்டறிதலினும் மேலான பேறு வேறொன்றில்லை யென்பது தேர்ந்த பொருளாகின்றது. அப்பெரும் பேற்றினைத் "தெய்வதரிசனம்" என்று சொல்லுவது யாவர்க்கும் உடன்பாடாம். எல்லாச்சமயங்களினும் விளங்கும் பரம்பொருள் கருத்து வேறுபாடு பற்றியே பலபேதப்பட்டழைக்கப்படுமென்று காட்டுதற்கு ஒரு சிறு உதாரணமுண்டு தமிழனெருவன் தெலுங்கனெருவன் ஆங்கிலதேசத்தானெருவன் ஆகிய மூவரும் ஒரு சாயங்காலத்தில் இன்று நாமெல்லாம் ஒருங்குசேர்ந்து மத்தியான தாகசாந்தி பண்ணிக்கொள்வோமென்று தீர்மானித்துக் கொண்டார்கள். ஆயினும் இன்னதுதான் புசித்தல் வேண்டுமென்று நிச்சயிக்கவில்லை. தமிழன் பேரிச்சம்பழம் புசிப்போமென்றான். தெலுங்கன் கர்ச்சூரபண்டுவாங்கி அதனைப்புசிப்போமென்றான். ஆங்கில தேசத்தானே அதுவெல்லாங் கூடாது, டேட்ஸ் (dates) தான் புசித்தல் வேண்டுமென்றான். இவ்வாறு ஒருவருக்கொருவர் மாறுபட்டுக் கூறவே பெருங் கலகம் விளைவதாயிருந்தது அத்தருணத்தில் ஒரு பழக்கூடை கொண்டு வீதிவழியாக ஒருவன் போய்க்கொண்டிருந்தான். அவனைக்கண்டதும், இவர்கள் தலைமேலாகக் குதித்து இதுதான் வேண்டுமென்று பழத்தைச் சுட்டிக் காண்பித்தார்கள. கலகமெல்லாமெங்கேயோ பறந்துபோயிற்று. மூவரும் தாம்குறித்த பழத்தையே வாங்கிப்புசித்து மனந்திருப்தியடைந்தார்கள். இவர்களுக்குள்ளே நேர்ந்த கலகம் வார்த்தையைப்பற்றியேயன்றி வேறில்லை. ஆதலால் "ஸத்ஏகமே விப்பிரர் பலவிதமாகச் சொல்வர்" என்னும் இருக்குவேத வாக்கியம் போதிப்பதுபோல சமயிகளெல்லாம் பரம்பொருளைக் கருது, கண்டோர் கூறும் மொழிகளைப்பற்றிப் பலபடக் கூறுவர்களென்பதும் தெளிந்த உபசாந்தமடைந்த அருட்புலவர் "இருந்ததனையிருந்தபடியிருந்து" ணர்ந்து மவுனமாயிருப்பரென்பதும் இவ்வுதாரணத்தினுலறியக்கிடந்தன.

..................................................

ஸ்ரீகைலாசத்துப் பரமேசுவர சஹிதராயிருக்கும் பார்வதியாருக்கு உலகத்தின்மீது கலிலாக்கருணை பொங்கியதனுல் அவரது திருவுள்ளத்தில் தன்னுடைகளை யுணரும்நெறி யின்னதென்று உலகத்தாருக்கு எடுத்துக்காட்டவேண்டுமென்றொரு விருப்பம்நிகழ்ந்தது. விருப்பம் நிகழ்தலும் தான் எப்போதுஞ் சிவபெருமானேடிருந்தாராயினும் அப்பெருமானது பூரணவுருவைத் தெரிந்தேதாமில்லையே யென்றொருவகையான அதிருப்தியுமுடனிகழ்ந்தது. இனிக் காலதாமதமாகாதென்று உறுதிகொண்டு அம்மையார், தவக்கோலம் பூண்டு சிவத்தின் மெய்ச்சொரூப மின்னதென வறிவாமென்று ஓரேகாந்த ஸ்தானத்தையடைந்து கணமும் பிரியாது அருந்தவம் புரிந்தார். சிறிதுகாலஞ் செல்லவே சிவபெருமான் பனிக்கட்டியன்னவெண்மையான ரிஷபவாகனரூடராய் பூதகணங்களாற் சூழப்பட்டு தவம்புரியும் அம்மையார் முன்வந்து நின்றார். நின்று "உமையவளே நீ செய்தவத்தை மிகவும் மெச்சினேன்; உனக்குத்தரிசனந் தருமாறே யான் இவ்விடத்திற்கு வந்தேன்" என்றார் பார்வதியார் கண்விழித்து வெள்ளேற்றினராய் முன்னின்ற பிரானை நோக்கி "உம்மைக்காணும் நான் காட்சிப்பொருளாகிய உம்மிலும் பெரியள். அதுவன்றியும் காட்சிக்கு விஷயமாகும் பொருள்கள் யாவும் மாறுதலடையும், என்றும் மாறுவியல்புடையதொரு பொருளினையே யான் காணுமாறு விழைந்தேன்" என்றனர். உடனே காட்சியும் மறைந்தது. இன்னுஞ் சிலகாட்செல்ல சோதிரூப மொன்று பொலிவு பெறும் வதனத்துடன் அவர் மனத்திற்கினைத்து "பாராய் யானே சிவம்" என்றது. அம்மையார் கண்டு "நீ பாவிக்கக்கூடிய பொருளாதலின் உன்னைப் பாவிக்கும் மனதினும் தாழ்ந்த நிலையினையாயினை; ஆயின் நீ கடவுளாமாறியாங்ஙனம்?" என்று கூறியிகழ்ந்து அதனையுங் கழித்தார். உடனே இந்தச் சோதி சொரூபமும் தோன்றியவாறே மறைந்து "அங்கிங்கெனுதபடி எங்கும் பிரகாசமாய்" ஒரு சோதி தோன்றியுலகமுழுது மூடிற்று. இதனைக்கண்டு மனமுஞ் சிறிதாணங்கிக்கவே "இதுதான் சிவமோ" வென்று அம்மையார்க்குச் சந்தேகந் தோன்றிற்று. ஆனலும் திருப்தியுண்டாகவில்லை. ஏனென்றால் அம்மையார் உடனே, "எங்கும் நிறைகின்ற பொருளொன்றும் இதனைக் காண்கின்ற என்மன மொன்றுமாக இரண்டு பொருள்களுள்ளன ஆதலால் இப்பொருளும் பரிபூரண சிவமாகாது" என்று தனக்குள்ளே நிச்சயித்துக் கொண்டார். இவையன்றிப் பலவகைப்பட்ட காட்சிகளும் பாவனைகளும் அவர் மனத்தில் அடிக்கடி தோன்றின. அவற்றினையெல்லா மிவ்வாறே கழித்தார். கடைசியாக இவரது திருவுள்ளமும் புறம்பே போகாது தன் தலைவனகிய சிவபரம் பொருளினிடத்தேயொடுங்கி நின்றது அப்பொழுது இவரது அறிவென்றும் சிவத்தினதறிவென்றும் பிரித்துணரவல்ல தற்போதமிவரிடத்திலிந்நிலையும்நின்றது மாய்த்ததனுல் அம்மையார் சிவானந்தத்திலழுந்தினார். காலதேசாதி கடந்த மனமுமற்ற நிலையினை யின்னதென்று சுட்டிக்கூற அந்நிலையையடைந்தார் தாமும் கூறவல்லாரல்லராயின், வாணுலை வானது கழித்துத் திரிந்து வருஷத்தி லொருமுறையாயினும் அந்நிலையைப் பெறவேண்டுமெ யென்றபேக்ஷிக்கும் பாக்கியங்கூடப் பெறாத நிம்மையேம் எவ்வாறு வருணித்துக் கூறவல்லேமோ? உடல் மன வுலகங்களது ஞாபகத்தன்மைவிட்டு முழுதுமான்று தேவியார் பரிபூரணத்தோடொன்று நிற்கவே எண்ணிலி காலங்கழிந்தது. கழிந்தபின்னர் ஆகாசத்திற் காற்றசையுமாறு போலப் பரமாகாசத்தில் இவர் தற்போதம் சலிக்கத் தொடங்கிற்று. அப்பொழுது உலகமுளதென்னும் உணர்வு முடனே நிகழ்ந்தது. ஆயினுந் தாம் முன் அநுபவித்த நிலையை மறக்கக்கூடவில்லை. உலக வுணர்வோடு விழித்ததும் அவர் சொல்வார் "நானே சிவம் சிவம் நானே என்னியல்புணரேனாய் உலகத்தை யாளுந் தெய்வங்களோடொப்ப என்னையும் ஒருதெய்வமா வைத்தெண்ணினேன். சிவத்துக்குப் பொன்றுத் துணையாயிருந்து உயிர்களுக்கு இன்பம் உதவும் அருட்டாயின் சொரூபமன்றோ என் சொரூபம்? என்று முள்ளதும் அளவுபடாததும் சுகசொரூபியும் சித்விலாசமுமாகிய பரம்பொருள் யானே யன்றோ? வேதங்கள் நாவாரவேத்தும் பொருளும் முனிவரது தவயோகங்களின் பொருளும், தேவர்கள் வணக்கத்தை யேற்றுக்கொள்ளும் பொருளும் நானேயன்றோ? ஸர்வத்திலுந் தங்குவதும், நிர்க்குணமுடையதும் உலக கர்த்தாவும் நானே 'ஒன்றேயுளது' என இருக்குவேதங்குறிக்கும் பரம்பொருளும்யானே." இவ்விதமாக உலகமுய்யும் நெறியை அறிவுறுத்தருளினர் பார்வதியம்மையார். இங்குக் காட்டிய கதையுள் முதல்வடிவம் சகுணத்தியானத்தின் பயனையும் இரண்டாவது யோகிகள் பயிலும் சோதிவடிவத் தியானத்தின் பயனையும், மூன்றாவது சொரூபம் ஞானபக்குவர்களுக்குத் தோன்றும் பரை தரிசனத்தினையும் நான்காவது மவுனநிலையினர் காணுதற்கும் வாக்குமனதிற சிவபரம் பொருட் டரிசனத்தினையும் சுட்டிநிற்கும். (ஞானபோ)

Tamil community that, but for Mr. Coomara Swamy's spirited opposition to the Waste Lands Ordinance and the strong language used by him during the discussion of the measure in Council, his nomination for re-appointment as Tamil Member by the vast majority of the Tamils of Ceylon would not have been so unceremoniously rejected by His Excellency the Governor and another gentleman who was not a candidate for the office would not have been appointed in his place. Finding that the Government were determined to pass the measure and that their opposition would have been of no avail to prevent it, the unofficial members did not, we believe, divide the Council or submitted a protest against it. The Secretary of State was not, therefore justified in making such a statement in Parliament. It is not again true that this Ordinance is regarded with satisfaction by the vast majority of the natives. We wish to know the channel by which the state of native public opinion in Ceylon was conveyed to Mr. Chamberlain. The Chilaw Association which, strongly protested against this Ordinance at the time it was introduced into Council, has now, at a special meeting held on the 8th Instant, passed the following resolution:—

"That the statement of the Secretary of State for the Colonies in the House of Commons on the 20th March last to the effect that the principle of Land Ordinances of Ceylon is regarded with satisfaction by the vast majority of the natives has no foundation, and this Association is of opinion that the statement was made by Mr Chamberlain in ignorance of facts and under misinformation, the truth being that the said Ordinances are both in principle and in their practical working oppressive and extortionate, as regards the natives, amongst whom they have been the cause of the greatest dissatisfaction with the Government from the earliest times"

There is no doubt that the present agitation in the press and Parliament in England is due to the exertions of Mr. Le Mesurier and the presence of his Muhammadan wife, who is an influential English lady, in England. This is made capital of by the Secretary of State and the apologists of the Goverment in this Island in their defence of the Waste Lands Ordinance. It is, however, wrong to think that the Members of Parliament who have now identified themselves with Ceylon grievances would not have been moved to act in this manner by any other agencies. We know for certain that there are members of Parliament who are ever ready to ventilate the grievances of Her Majesty's subjects in any quarter of the globe, regardless of caste, creed or color; and Mr. Schwann is one of them It does not require the presence of influential persons in England to prevail upon them to undertake this task When once they are convinced that a real grievance exists, these philanthropists will do everything in their power to get them redressed It was Mr. Schwann who in September 1893 asked the under-Secretary of State for the Colonies on what ground Mr (now Sir William) Twynam was retained in the Agency of the Northern Province against the wishes of the people for about forty years after he had passed the age at which Civil Servants were called upon to retire from the service in the colony We are aware that on that occasion Mr Schwann was prevailed upon to put that question in Parliament by the mere perusal of the Memorial to the Secretary of State from some of the leading inhabitants of Jaffna praying for the removal of that officer from this Province, a copy of which was forwarded to Mr. Sahwann with a letter detailing the grievance of the people from a gentleman here who had never before any correspondence with that Member of Parliament. Another Member of Parliament also was then approached in connection with the same question, and he sent a polite reply enclosing copies of correspondence he had on the subject with the Marquis of Ripon, then Secretary of State for the Colonies, and His Lordship's reply which left little room for doubt that Mr Twynam's term of office in Jaffna would not be of much longer duration. We bring these facts to show that Mr Schwann and other members of Parliament who are now interesting themselves in the affairs of Ceylon are simply actuated by philanthropic motives and that they would have done the same thing, if glaring cases of injustice and oppression be brought to their notice even by the meanest of Her Majesty's subjects, instead of, as it has been done in the present case, by Mr. and Mrs. Le Mesurier who have influential friends in England and who are themselves now present in that country,

## LOCAL AND GENERAL

The Weather—The little monsoon has set in, after continuous rains which fell here for more than a week till the 19th Instant. The weather during these rainy days was such as had never before been experienced in Jaffna in the month of April and reminded one of winter season. Great damage has been caused in some parts to dry grains in fields and other plantations in low lands.

The Government Agent—Mr. Ievers who returned only recently from an extended tour in the Islands and the Vannie Districts left again on the 13th Instant on another of his frequent tours. It is said that he will be absent from Jaffna this time for about two months.

Mr John Rudd—We have to extend a hearty welcome to this gentleman who arrived here on the 20th Instant by the "Lady Gordon," after an absence of 8 years from Jaffna to resume the offices of Deputy Fiscal and Superintendent of Police, Jaffna, which he had held here for a considerable time with the greatest acceptance to the public He went to Galle on promotion 8 years ago and comes back to Jaffna for the benefit of his health, exchanging duties with Mr. Tranchell who has already left for Galle after giving over charge of his duties to Mr Rudd.

Mr. Rudd's name was a household word in Jaffna and people here sometimes felt his want in view of the increase of rowdyism and lawlessness. It is only right to say that Mr Tranchell was very much liked by the Jaffna public on account of his gentlemanly qualities and conscientious discharge of his duties.

The Jaffna Headmen—We understand that all the Chief Headmen of this District will be present in Colombo for the Birthday Levee, and preparations are being made by them for their trip to the Metropolis.

Birthday Honors—We understand that the Goverment Agent has recommended the Maniagar of Jaffna for the title of Mudaliyar and the Maniagar of Tenmarachi for a Gate Mudaliyarship.

Wreck of a Brig—A Chittacong Brig from Akyab with a cargo of 12000 bushels of paddy of the value of about Rs 12000 for Kankesantorai, Jaffna, stranded at Mullaitivu on the 11th Instant and has since become a total wreck The tindal and crew have safely arrived at Point Pedro The customs authorties at Mullaitivu were able to save only about 500 bushels The whole quantity of paddy in that vessel was consigned to only one Chetty Firm here, the well-known R M. M S T Firm. The Firm will sustain a loss of only about Rs. 2000 on account of this wreck as the paddy was insured for Rs 10000.

Dr S. C Paul—This gentleman who is the eldest son of Dr. William Paul of the Jaffna, F N S Hospital and who married in Colombo, on the 12th Instant, Miss Asserappa, arrived here on the 20th Instant with his bride, and was accorded a hearty reception by his friends and relations We offer our congratulations to the bride and bridegroom and wish them happiness and prosperity.

The New District Mudaliyar of Vavuniya North—We are glad to hear that Mr. V. Mudaliyar Muttu Valupillai of Kanterodai, Jaffna second son of the late Valupillai Mudaliyar, Superintending officer P W. D, has been appointed District Mudaliyar of Vavuniya North We have no doubt that he will justify Mr. Ievers choice for this important office and that he will rise to positions of still greater trust and responsibility under Government, Mr. Muttu Valupillai is a gentleman of large independent means and very few had expected that he would ever get into Government service. Now that he has chosen this sphere of life we wish him every success.

Important Changes Among Headmen—Mr Ievers the Government Agent, having retired the Maniagars of Poonrin and Karachi, has promoted Mr Sandrasegara, District Mudaliyar of Vavuniya North, to the Maniagarship of Poonarin, and Mr Ponnambalam, the energetic Udaiyar of Kankesanturi, has been appointed Maniagar of Karachi We congratulate these gentlemen on their appointment to these important offices.

The President of Village Tribunal Vavuniya—We are glad to learn that Mr Chelliah, eldest son of the late Mr. KanapathyPillai, Head Clerk Mullativu Kachcheri, who is now 4th clerk of the Batticaloa Kachcher, has been recommended for this office Mr Chelliah is well qualified for the appointment by reason of his birth, education and high character, and we feel sure that he will prove an acquisition to that District.

Obituary—We regret to chronicle the death of Master Seenivasagam Ragunater which took place on the 8th Instant at Tellipalai his native place. He is a grandson of the late Mr. Kanagaratna Mudaliar and a nephew of Mr. K. Mudr Navaratnam who was the guardian of the deceened since the death of his parents. The deceased was prosecuting his studies in the Hindu College and was very amiable and intelligent We tender our heartfelt sympathy to Mr. K. Mudr Navaratnam and other relatives who bemoan his loss.

—Death is also announced of Mr Kathirgamer Ramalinga Vaunia. commonly known as Banda Viramuttu, at the age of 80. He traced his descent from the Princes who ruled in the Vannies and was at one time a prominent figure in Jaffna. He was engaged in several lawsuits with the Government in connection with lands in the Pachilapali and Vanni Districts, and became almost ruined on account of them.

## CEYLON IN THE HOUSE OF COMMONS

In the House of Common on Monday Mr- Schwann criticisedthe operation in Ceylon of the ordinance of 1897, which declares that forests and waste lands shall be deemed to be the property of the Crown, and stated that it was harsh and unjust and had caused conflicts between the judicial authorities of the island and the Executive. Mr. Schwann went on to give partciuars of the case of Mr. Le Mesurier, who had bought certain lands in order to test the legality of the Waste Lands Ordinance. Mr. Chamberlain, in reply, said that he was awaiting a report on the subject to which attention had been called, and so could only give a perfunctory explanation. Possibly the ordinance was justly open to some criticism, and it might be that the Legislative Council of Ceylon had passed a faulty measure. In that case steps would be taken to correct any error that had been committed. Or it might be that subordinate officials had acted wrongly. But until he should have received the report to which he had referred it would be impossible for him to express any opinion upon these points. The ordinance, he believed, was necessary, but perhaps it was too arbitrary. The non-official members of the council, however, had not objected to it, It was said to be regarded with satisfaction by the majority of the natives. In the course of his reply Mr. Chamberlain said it was of the greatest importance to know from whom the Hon. gentleman's brief came. He believed it would be found that the charges put forward by the Hon. member wereall due to the energy and zeal of Mr. LeMesurier. who was married to an English wife, and who sought a divorce from that wife, and failed to obtain it. Thereupon he converted himself to Mohammedanism, and married a second wife under the Mohammedan rites. That was the reason why he was at once dismissed from the Service, because his conduct constituted nothing more nor less than a public scandal, Mr. LeMesurier, who had been presented to the Committee as a champion of the native cause, had been buying up for absolutely insignificant sums from the natives speculative claims against his own Government. It was because of this action, and the temptation that an example of that kind offered to others to follow in the same line, that the Governor found it necessary to introduce the ordinances complained of.

Mr. Weir asked the Secretary of State for the Colonies whether he was aware that the Supreme Court of Ceylon, when dealing recently with several cases affecting the land, ruled that the acts of the Government agents in the administration of the Governor's Ordinance, No. 1 of 1897, were illegal and invalid; but that the Governor, Sir West Ridgeway, instead of accepting this ruling was endeavouring to enact an amending Ordinance affecting the rights and liberties of her Mejesty's subjects in the colony; and if he would consider the expediency of taking such steps as might be necessary to prevent the amending Ordinance being passed into law.

Mr. Chamberlain: The Supreme Court of Ceylon held that certain proceedings of the Government agents under the Ordinance No. 1 of 1897 did not comply with the provisions of the Ordinance and were consequently invalid. It is not correct to say that the Governor, Sir West Redgeway, did not accept this ruling. As to amending Ordinance, I may refer the Hon member to my answer to the question of the member for North Manchester on the 10th instant.

Mr. Schwann asked the Secretary of State for the Colonies whether his attention had been drawn to a statement made by Mr. Justice Lawrie at the Colombo Criminal Sessions on January 24, 1899, as to the issue of circulars by the Colonial Secretary of Ceyon to Magistrates and others, which the judge held to be more often than not irregular and illegal; and whether he would take measures to prevent interference of the executive of the Government of Ceylon with the judicial establishment of the island and the working of its criminal code.

Mr. Chamberlain: I have seen the report of the statement made by Mr. Justice Lawrie, but have no information beyond it. The Governor of Ceylon will shortly be in this country, and I will make inquiry from him on the subject.

Mr. Schwann asked the Secretary of State for the Colonies whether the draft ordinance printed in the "Ceylon Government Gazette" of Nov. 18, 1898, and proposed as an amendment of the Ceylon Ordinance No. 1. 1897, had yet been submitted to Her Majesty's Government for approval; and whether, before the amending ordinance received the royal sanction, it would be referred to the law officors of the Crown for their opinion.

Mr. Chamberlain: The answer to the first pragraph of the question is yes. In answer to the second paragraph, I have to say that as at present advised I do not anticipate that it will be necessary to refer the ordinance to the aw officers.

Printed and Published by P. Carthigasa-Pillai for the Proprietors at the Saivaprakasa Yantra Office, Jaffna.